## நன்னடத்தை அறிக்கை

## எழுத்தாளர்களுக்கு:

- சமூகச்சாளரத்திற்கு ஆக்கமொன்றை சமர்ப்பிப்பதனூடாக அவ்வாக்கம குறித்த எழுத்தாளரின் சொந்த படைப்பென்பதையும் வேறெங்கும் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்படாததென்பதையும் எழுத்தாளர் ஒப்புக்கொள்கிறார்.
- வரைப்படங்கள் புள்ளிவிபரங்கள் போன்றவை வேறேதேனும் ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டிருப்பின் அதற்கான சம்மதம் அவ்வாக்கங்களின் பதிப்புரிமையாளர்களிடம் இருந்து முறையாக பெறப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறல்லாது முறைகேடுகள் இடம்பெற்றிருக்குமாயின அதற்கான பொறுப்பை இவ்விதழ் ஏற்றுக்கொள்ளமாட்டாது.
- இவ்விதழுக்காக ஏற்றுக்கொள்ளப்படும் ஆக்கங்களின் ஆசிரியர்கள் அவ்வவ் ஆக்கங்களின் உள்ளடக்கங்கள் Creative Commons Attribution-Non Commercial 4.0 International License இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீள உபயோகிக்கப்படுவதை ஏற்றுக்கொள்கிறார்கள்.
- இவ்விதழில் வெளிவரும் ஆக்கங்களுக்கெதிரான கருத்துக்கையாடல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இவ்விதழாசிரியரினதும் அவரது விருப்பின் பேரில் நியமிக்கப்படும் மதிப்பாய்வுரையாளர் குழாமினதும் தகுந்த விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும். வுpசாரணை முடிவில் அத்தகைய குற்றங்கள் ஏதேனும் நிரூபிக்கப்பட்டால் குறித்த ஆக்கம் அது வெளியான இதழிலிருந்து நீக்கப்படுவதோடுää அது தொடர்பாக குறித்த எழுத்தாளர் பணிபுரியும் நிறுவனத்திற்கும்ää அவ்வாய்வேட்டிற்கு நிதியுதவியளித்த நிறுவனத்திற்கும் அறிவிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் ஆய்வேடுகளில் ஏதேனும் கருத்துக்கையாடல்கள் காணப்படுவது முன்கூட்டியே அறியப்பட்டால் இதழாசிரியர் அவ்வாய்;வேட்டை நிராகரிப்பதற்கும் அல்லது கருத்துக்கையாடலின் அளவைப்பொறுத்து குறிப்பிட்ட சில பகுதிகளைத் திருத்தித் தருமாறு எழுத்தாளரை கோருவதற்குமான உரித்துடையவராகிறார். சுய கருத்துக்கையாடல்களும் மேற்குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு விதிவிலக்கானதல்ல என்பதை கவனத்திற்கொள்ளவும்.
- ஆய்வேடுகள் இணை ஆசிரியர்களை உள்ளடக்கியதெனின்ää குறித்த ஆய்வேட்டுக்கான அவர்களின் பங்களிப்பு யாதென்பதை தெளிவாகக்குறிப்பிடும் கோவை ஒன்றையும் சமர்ப்பிக்குமாறு எழுத்தாளர்கள் வேண்டப்படுகின்றார்கள். பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு எழுத்தாளரும் எந்த அளவிற்கு என்ன வகையான பங்களிப்பினை நல்கினார்கள் என்பன போன்ற விபரங்கள் இவ்வாவணத்தில் மிகத்தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் ஆய்வேட்டில் வழங்கப்பட்டிருக்கும் அனைத்து தகவல்களையும் ஆசிரியர்கள் இணை ஆசிரியர்கள் உள்ளடங்கலாக அனைத்து பங்களிப்பாளர்களும் அறிந்தே வைத்துள்ளனர் என்பதை நிரூபிக்கும் ஓர் ஆதாரமாக இந்த ஆவணம் கருதப்படும். எனவே சர்ச்சைக்குரிய கருத்துக்கள் யாதேனும் ஆய்வேட்டில் இடம்பெறுவதை தவிர்த்துக்கொள்ளல் அவசியம். யாருடைய பெயர்கள் இணை ஆசிரியர்களாக குறிப்பிடப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் யாருடைய பங்களிப்புகள் ஒப்புரை அல்லது நன்றிகூறலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் மிகக்கவனமாக தீர்மானங்களை எடுக்குமாறு கட்டுரை ஆசிரியர்கள் வேண்டப்படுகிறார்கள். கருத்துக்கள் பகுப்பாய்வுகள் மற்றும் தொழி;நுட்ப உதவிகளை நல்கியவர்களின் பெயர்கள் ஒப்புரையில் குறிப்பிடப்படுவதும்

மிகமுக்கியமான உதவிகளை வழங்கியவர்களின் பெயர்கள் மாத்திரமே இணை ஆசிரியர்களாகக் குறிப்பிடப்படுவதுமே பொது வழக்காக உள்ளதென்பதை ஆசிரியர்கள் கவனத்திற்கொள்தல் வேண்டும்.

- ஆய்வுக்கான நிதியுதவியளித்தவர்கள் (இருப்பின்) ஒப்புரையில் அவர்களது பெயர்கள் குறிப்பிடப்பட முடியும்.

## இதழாசிரியர்களுக்கு

- சமர்ப்பிக்கப்படும் எல்லா ஆய்வேடுகளும் பக்கச்சார்பற்ற முறையில் உடனுக்குடன் மதிப்பீடு செய்யப்படுவதற்கு இதழாசிரியர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் துணைநிற்பர்.
- மதிப்பீட்டாளர்கள் யார் என்பது தவிர்ந்தää கையளிக்கப்பட்ட ஆய்வேடு ஒன்று தொடர்பிலான ஏனைய எல்லா விதமான விபரங்களையும் கட்டுரை ஆசிரியர்களுக்கு வழங்க இதழாசிரியர்கள் கடமைப்பட்டவர்களாகின்றனர். அத்தகைய எளிய அணுகுமுறை இவ்விதழ் மீதான கட்டுரையாசிரியர்களின் நம்பிக்கையை மேலும் அதிகரிக்கும்.
- ஆய்வேடுகள் தொடர்பாக இதழாசிரியர்கள் தன்னிச்சையான முடிவுகளை எடுக்க மாட்டார்கள். சமர்ப்பிக்கப்படும் எல்லா ஆய்வேடுகளும் தரமான மதிப்பீட்டுக்கு உடனுக்குடன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கான உரிமையை இதழாசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். எவ்வாறாயினும் சமர்ப்பிக்கப்படும் ஆய்வேடுகளில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பது அறியவரும் பட்சத்தில் இதழாசிரியர்கள் அவ்வாய்வேடுகளை நிராகரிக்கவோ சீராய்வு செய்யுமாறு ஆசிரியர்களைப் பணிக்கவோ முடியும். கருத்துக்கையாடல்கள் போன்ற முறைக்கேடுகள் தொடர்பான நடைமுறைகள் பற்றி விரிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கட்டுரையாசிரியர்களுக்கான நன்னடத்தை அறிக்கையை வாசிக்கவும்.
- இதழாசிரியர்களுள் ஒருவர் இவ்விதழுக்கு கட்டுரையொன்றை சமர்ப்பிக்க விரும்பினால் தகுதியுடைய வேறொருவர் அக்குறிப்பிட்ட கட்டுரையுடன் தொடர்புடைய இதழாசிரிருக்கான அனைத்துப் பொறுப்புக்களையும் தற்காலிகமாக ஏற்றுக்கொள்வார். அவ்வாறு கட்டுரையொன்றை சமர்ப்பிக்கும் இதழாசிரியர் ஏனைய எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் தகவல்களுக்குமதிகமாக வேறெந்த தகவல்களையும் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். அக்குறித்த கட்டுரையின் மதிப்பீட்டுச்செயன்முறையில் எவ்விதமான சலுகைகளும் இடம்பெறமாட்டாது.
- வெளியிடப்படாத கட்டுரைகளினதும் கட்டுரை மதிப்பாய்வுரையாளர்களின் விபரங்களினதும் இரகசியத்தன்மை இதழாசிரியர்களினால் பேணப்படும். மதிப்பீட்டின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து கட்டுரைகளினதும் இரகசியத்தன்மையும் அவை வெளியிடப்படும் வரை பேணப்படும்.
- சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் சார்ந்த துறைகளில் தேர்ச்சி பெற்ற இரு மதிப்பாய்வுரையாளர்களுக்கு இதழாசிரியர்கள் கட்டுரைகளை அனுப்பிவைப்பர். அக்கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அல்லது நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக இதழாசிரியர்கள் எழுத்தாளர்களுக்கு அறிவிப்பார்கள். கட்டுரையொன்று ஏற்றுக்கொள்ளப்படுதல் தொடர்பாக மதிப்பாய்வுரையாளர்களுக்குள் கருத்து முரண்பாடு

நிலவுமேயானால்ää அக்கட்டுரை இதழாசிரியரினால் மூன்றாவது மதிப்பீட்டாளர் ஒருவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு கருத்து பெறப்படும்.

- வெளியிடப்படாத (அங்கீகரிக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட) கட்டுரைகளிலிருந்து பெறப்படும் உள்ளடக்கங்கள் அக்கட்டுரையாசிரியரின் அனுமதியின்றி இதழாசிரியர்களால் அவர்களது சொந்த ஆக்கங்களில் பயன்படுத்திகொள்ளப்பட முடியாது.

## மதிப்பாய்வுரையாளர்களுக்கு

- மதிப்பாய்வுரையாளர்களும் இதழாசிரியர்களும் தமக்குள் இணங்கி குறித்துக்கொண்ட கால வரையறைக்குள் மதிப்பாய்வுரையாளர்கள் தமது மதிப்பாய்வுரைப்பணியை நிறைவேற்றிக்கொடுத்தல் வேண்டும்.
- வழங்கப்படும் கட்டுரைகளை மதிப்பாய்வுரை செய்வது தொடர்பில் நேரப்பற்றாக்குறை அல்லது தேர்ச்சியின்மை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் காணப்படுமாயின் அக்குறித்த கட்டுரைகளை மதிப்பாய்வுரையாளர்கள் உடனடியாக இதழாசிரியர்களிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும்.
- மதிப்பாய்வுரைக்காக வழங்கப்பட்ட கட்டுரைகளின் இரகசியத்தன்மையை பாதுகாக்கக்கூடியவர்களாக மதிப்பாய்வுரையாளர்கள் காணப்படுவர்.
- குறித்த கட்டுரையொன்றின் உள்ளடக்கத்துடன் அல்லது ஆசிரியருடன் மதிப்பாய்வுரையாளருக்கு யாதாயினும் கருத்து முரண்பாடுகள் இருப்பின் அக்கட்டுரை உடனடியாக இதழாசிரியரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையொன்று நிராகரிக்கப்படும் பட்சத்தில் அல்லது முக்கிய மாற்றங்கள் செய்துத்தரப்படுமாறு கோரப்படும் பட்சத்தில் அதற்கான விவரமான விளக்கங்கள் மதிப்புரையாளர்களினால் இதழாசிரியர்களுக்கு வழங்கப்படும். எழுத்தாளர்கள் தமது ஆய்வுகளின் தரத்தை எதிர்காலத்தில் மேலும் உயர்த்திகொள்ளும் நோக்கில்ää மதிப்புரையாளர்களிடமிருந்து பெறப்பட்ட அவ்விளக்கங்கள் குறித்த எழுத்தாளர்களுக்கும் வழங்கப்படும்.
- மதிப்பாய்வுரைக்காக வழங்கப்படும் வெளியிடப்படாத கட்டுரைகளின் உள்ளடக்கங்கள் எதையேனும் மதிப்பாய்வுரையாளர்கள் தமது சொந்த ஆக்கங்களுக்காக பயன்படுத்தி கொள்ளமாட்டார்கள்.

சமூகச்சாளரமானது மதிப்பாய்வுரை மற்றும் வெளியீட்டு செயன்முறைகளினூடாக அதிகூடிய தரத்தை தக்கவைத்து கொள்ள முயற்சிக்கும் அதேவேளை வெளியிடப்படும் ஆக்கங்களின் உள்ளடக்கம் தொடர்பான எவ்விதமான சட்டரீதியான பொறுப்புகூறல்களையும் ஏற்றுக்கொள்ளாது.